178

033711

DIRECTOR OF SOCIAL WE...
28 OCT 2016
GUINDY, CHENNAI-600...

சுருக்கம்

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை – புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.சத்துணவுத் திட்டம் – பணியிடையே மரணமடைந்த சத்துணவு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி வழங்குதல் – கருணை அடிப்படையில் பணி வேண்டி விண்ணப்பம் அளிக்கும்போது திருமணமாகமல் இருந்து பிறகு திருமணமான பெண் வாரிசுதாரர்களுக்கு சத்துணவு திட்டத்தில் கருணை அடிப்படையில் பணி வழங்க மாவட்ட ஆட்சியர்களுக்கு சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு அதிகாரம் வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந4–2) துறை,

அரசாணை (நிலை) எண்.78

நாள். 25.10.2016
திருவள்ளுவர் ஆண்டு 2047
துன்முகி ஐப்பசி 9

படிக்கப்பட்டவை:-

1. அரசு கடித எண்.37910/சஉதி–3/92–2, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை, நாள். 06–11–1992.
2. அரசாணை (நிலை) எண்.215, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 08.09.1998.
3. அரசாணை (நிலை) எண். 198, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள். 25.10.2007.
4. அரசாணை (நிலை)எண்.163, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள். 18.08.2010.

மேலும் படிக்கப்பட்டவை:-

5. சமூக நல ஆணையர் அவர்களின் நேர்முக கடித எண்.17430/சஉதி–1/2014 நாள் 16.06.2016.

------

ஆணை:-

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசுக் கடிதத்தில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்தில் பணியாற்றும் சத்துணவு அமைப்பாளர்கள் எவரேனும் தங்கள் பணிக்காலத்தில் காலமாகிவிட்டால் அவர்களது குடும்ப வாரிசுதாரர்களில் தகுதியான ஒருவருக்கு கருணை அடிப்டையில் சத்துணவு அமைப்பாளராக பணி நியமனம் வழங்க வேண்டியிருப்பின் மனுதாரரின் கல்வித் தகுதி, வயது வரம்பு, வாரிசு உரிமை, குடும்பத்தில் உள்ள பிறர் அரசு பணியிலிருப்பது போன்ற விவரங்களை பரிசீலித்து மாவட்ட ஆட்சித் தலைவரின் குறிப்புரை/பரிந்துரையுடன் தக்க முன் மொழிவுகளை அரசுக்கு அனுப்பி அரசின் முன் அனுமதி பெற்று பணி நியமனம் வழங்க அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுமதியளித்து ஆணைகள் வெளியிடப்பட்டது.

188

2) மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் சத்துணவு அமைப்பாளர்களுக்கு வழங்கப்பட்ட கருணை அடிப்படையிலான பணி நியமனச் சலுகையைச் சத்துணவு திட்ட சமையலர் மற்றும் சமையல் உதவியாளர்களுக்கும் நீட்டித்து அவர்களின் வாரிசுதாரர்களை அவர்களது வயது, வாரிசு உரிமை, குடும்பத்தில் உள்ள பிறர் அரசு பணியிலிருப்பது போன்ற விவரங்களை ஆய்வு செய்து தகுதிக்கேற்ப அந்தந்த மாவட்ட ஆட்சியர்களே சத்துணவு சமையலர் மற்றும் சத்துணவு உதவியாளர் பணியிடங்களில் நியமனம் செய்யலாம் எனவும் பின்னர் அது பற்றிய விவரங்களை உடனடியாக அரசுக்கு தெரிவிக்க வேண்டும் எனவும் ஆணையிடப்பட்டது.

3) மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் பின்வருமாறு ஆணை வெளியிடப்பட்டுள்ளன.

- அரசுப் பணியிடங்களில் காலிப்பணியிடங்களை பூர்த்தி செய்ய கருணை அடிப்படையிலான பணி நியமனங்களுக்கு விதிக்கப்பட்ட தடையாணை விலக்கிக் கொள்ளப்பட்ட நிலையில், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம் ஆகிய திட்டங்களில் பணியாற்றி வரும்போது காலமான பணியாளர்களின் பெண் வாரிசுதாரர்களுக்கு சத்துணவுத் திட்டங்களில் சத்துணவு அமைப்பாளர்/ குழந்தைகள் மைய பணியாளர் / சத்துணவு சமையலர், சமையல் உதவியாளர் மற்றும் குழந்தைகள் மைய உதவியாளர்களாக பணி நியமனம் செய்ய அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. அவ்வாறு பணி நியமனம் செய்து விட்டு அது பற்றிய விவரங்களை அரசுக்கு தெரிவிக்க வேண்டும்.
- சென்னை மாநகராட்சி குழந்தைகள் மையங்களில் பணியாற்றும், பணியாளர்களின் பெண் வாரிசுதாரருக்கு கருணை அடிப்படையில் பணி வழங்க இயக்குநர், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி பணிகள் திட்டம், சென்னை–113 அவர்களுக்கும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்ட பணியாளர்களின் பெண் வாரிசுதாரருக்கு கருணை அடிப்படையில் பணி வழங்க சமூக நல இயக்குநர் அவர்களுக்கும் அதிகாரம் வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.
- மேற்காணும் கருணை அடிப்படையிலான பணி நியமனங்களுக்கு கல்வித் தகுதி, வயது, தூரச் சுற்றளவு பெண் வாரிசு இல்லாத நிலையில் ஆண் வாரிசுதாரருக்கு பணி வழங்குதல் போன்ற நேர்வுகளுக்கு விதித் தளர்வுகள் ஏதும் தேவைப்படின் அரசுக்கு தக்க முன்மொழிவுகளை அனுப்பி அரசின் முன் அனுமதி பெற வேண்டும் எனவும் ஆணை வெளியிடப்படுகிறது.

4) மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் சத்துணவு பணியாளர்களின் பணிநியமனத்தின்போது கல்வித் தகுதி, வயது, தூரச் சுற்றளவு மற்றும் பிற தகுதிகள் குறித்த நடைமுறைகளை பின்பற்றுமாறு ஆணையிடப்பட்டுள்ளது.

5) பார்வை ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட சமூக நல ஆணையரின் கடிதத்தில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்தில் சத்துணவு அமைப்பாளர், சமையலர், சமையல் உதவியாளர் ஆகிய பணியிடங்களில் பணிபுரியும் சத்துணவு பணியாளர்கள் பணியிடையே காலமானால் அவர்களின் வாரிசுதாரர்களில், திருமணமாகாத மகள் என்ற நிலையில் பணி நியமனம் கோரி விண்ணப்பம் அளித்து, பணிநியமனம் வழங்கப்படுவதற்கு முன்னரே திருமணம் செய்து கொண்டவர்களுக்கும் சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு தொடர்புடைய மாவட்ட ஆட்சியர்களே கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்க அனுமதி வழங்குமாறு அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

6) சமூக நல ஆணையரின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அரசாணை (நிலை) எண்.165, நாள். 30–08–2010 மற்றும் அரசாணை (நிலை) எண்.96, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை,

180



நாள். 18–06–2012 ஆகியவற்றின் அறிவுரைகளை அடிப்படையாக கொண்டு, சத்துணவு திட்டத்தில் பணிபுரியும்போது காலமான சத்துணவு அமைப்பாளர், சமையலர், சமையல் உதவியாளர் ஆகியோர்களின் நெருங்கிய உறவினர்கள் என வரையறுக்கப்பட்டுள்ள நபர்களில், திருமணமாகாத மகள் என்ற நிலையில் பணி நியமனம் கோரி விண்ணப்பம் அளித்து, பணி நியமனம் வழங்கப்படுவதற்கு முன்னரே திருமணம் செய்து கொண்டவர்கள் கருணையடிப்படையிலான பணி நியமனத்திற்கு இதர தகுதிகளை நிறைவு செய்யும் பட்சத்தில், அவர்களுக்கும் பணி நியமனம் வழங்கிட வழிவகை செய்யும் வகையில் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு **இவ்வரசாணை வெளியிடப்படும் நாள் முதல்** பணி நியமனம் செய்ய, தொடர்புடைய மாவட்ட ஆட்சியர்களுக்கு அனுமதியளித்து ஆணையிடப்படுகிறது.

1. திருமணமாகாத நிலையில் உள்ள பெண்ணுக்கு, அக்குடும்பத்தில் உள்ள பிற வாரிசுதாரர்கள் அளித்த மறுப்பின்மைச் சான்றிதழ், திருமணமான பின், அப்பெண்ணுக்கு பணி அளிக்கப்படும் போது, மீண்டும், மற்ற வாரிசுதாரர்களால் மறுப்பின்மைச் சான்றிதழ் வழங்கப்படவேண்டும்.

2. திருமணம் செய்து கொண்ட பின்னர் பணி வாய்ப்பு பெறும் தனியர், தனது பெற்றோரின் குடும்பத்திற்கு உதவிபுரியும் வகையில் உறுதி ஆவணம் வழங்கப்படவேண்டும்.

3. கருணை அடிப்படையில் பணி வாய்ப்பு கோரியுள்ள திருமணமாகாத பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளவிருக்கும் நபர், எதிர்காலத்தில் அவரால் அவரது பெற்றோருக்குச் செய்யும் உதவிக்கு மறுப்பு ஏதும் ஏற்படுத்த மாட்டேன் என்ற உறுதி மொழியை அளிக்க வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. மணிவாசன்
அரசுச் செயலாளர்.

பெறுநர்,
சமூக நல இயக்குநர்,
சென்னை – 32.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்,

நகல்:-
மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை
அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை செயலாளர் அவர்களின் முதன்மை தனிச் செயலர், சென்னை – 9.
சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந.2) துறை, சென்னை – 9.
இருப்புக் கோப்பு /உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

26-10-16
பிரிவு அலுவலர்.
26/10/16